இதுவரை வாழ்ந்தவர்களிலேயே பெரிய அப்போஸ்தலனாகிய பவுல், புறஜாதியாருக்கு ஊழியம் செய்யும்படி தேவனால் அழைக்கப் பட்டவரும், புதிய ஏற்பாட்டு நிருபங்களில் அதிகமானவைகளை எழுதிய வருமாகிய பவுல், ஏழைகளின் பொருள்ரீதியான தேவைகளைக் கவனிப்பது தனது ஊழியத்தின் அத்தியாவசியமான அம்சங்களில் ஒன்று என்று கருதினார். தாம் ஸ்தாபித்த சபைகளில் ஏழைகளுக்காக அவர் அதிகமான பணத்தைச் சேகரித்தார் [பார்க்க, அப். 11:27–30; 24:17; ரோமர் 15:25–28; 1 கொரி. 16:1–4; 2 கொரி. 8:9; கலா. 2:10]. அவர் மனமாற்றம் பெற்றுக் குறைந்தபட்சம் பதினேழு ஆண்டுகள் கழிந்த பின்பு, அவர் எருசலேமுக்குப் பயணமாகச் சென்று தான் பெற்றுக் கொண்ட சுவிசேஷத்தைப் பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்கள் ஆராய்ந்து பார்க்கும்படி ஒப்புக்கொடுத்தார். அவர்களில் எவரும் அவர் பிரசங்கித்த செய்தியில் எந்தத் தவறையும் கண்டுபிடிக்கவில்லை. கலாத்திய நிருபத்தில் இதைக் குறிப்பிடும்போது பவுல் ''தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்'' என்று சொல்லியிருக்கிறார் [கலா. 2:10]. பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல் இவர்களுடைய சிந்தையில் ஏழைகளுக்கு மனதுருக்கம் காண்பிப்பது, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தது.

**சுருக்கம்**

இதைக் குறித்துச் சிறந்த ஆலோசனையைப் பவுல் சீஷர்களை உருவாக்கும் ஊழியர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது'' என்று அவர் தீமோத்தேயுவை எச்சரித்த பிறகு, ''சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக் கிறார்கள்'' என்பதை அறிவித்த பிறகு, இப்படியாக ஆலோசனை கொடுத்திருக்கிறார்:

> *நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத் தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத் தையும் அடையும்படி நாடு* [1தீமோ. 6:11].





# 33

# சுவிசேஷ ஊழியத்தின் இரகசியங்கள்

ஆபிரகாம் தனது அன்புக்குரிய குமாரனைப் பலியிடச் சித்தமாக இருந்தபோது, தேவன் அவனுக்கு ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்:

> நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக் கப்படும் [ஆதி. 22:18].

இந்த வாக்குத்தத்தமானது ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக் கும் [ஒருமை] கொடுக்கப்பட்டது, சந்ததிகளுக்கு [பன்மை] அல்ல என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டியிருக்கிறார். இயேசுவே அந்தச் சந்ததியாவார் [பார்க்க, கலா. 3:16]. கிறிஸ்துவில் எல்லா ஜாதிகளும், எல்லா இனக்குழுக்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த வாக்குத்தத்தில் உலகெங்கிலுமுள்ள ஆயிரக்கணக்கான புறஜாதி இனக்குழுக்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவார்கள். இவர்கள் வெவ்வேறான பூகோளப் பகுதிகளில் இருப்பதினாலும், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாகவும், வெவ்வேறு கலாச்சாரம் மற்றும் மொழிகளைக் கண்டிருப்பதினாலும், ஒருவருக்கொருவர் வேறுபட் டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப் பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதனால்தான் இயேசு வானவர் முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் மரித்தார் [பார்க்க, 1 யோவான் 2:2].

ஜீவனுக்குச் செல்லும் பாதை இடுக்கமானது, ஒருசிலரே அதைக் கண்டுபிடிக்கிறார்கள் என்று இயேசுவானவர் சொல்லியிருந்தாலும்

[பார்க்க, மத். 7:14], தேவனுடைய வருங்கால ராஜ்யத்தில் உலகத்தி லுள்ள எல்லா இனக்குழுக்களின் பிரதிநிதிகளும் இருப்பார்கள் என்று விசுவாசிக்கும்படியான காரணத்தை அப்போஸ்தலனாகிய யோவான் நமக்குக் கொடுத்திருக்கிறார்:

> இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, *சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து* வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத் திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டி யானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள் [வெளி. 7:9–10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் ஒரு நாளில் பல்வேறு திரளான மக்கள் கூட்டத்தினரோடு சேர்ந்து தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்னால் அவரை ஆராதிப்பதை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக் கிறார்கள்.

பல சமீபத்திய ஊழிய அருட்பணி செயல்தந்திரங்களில் உலகெங் கிலும் ''மறைவாக'' இருக்கும் ஆயிரக்கணக்கான இனக் குழுக்களை எட்டுவதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் ஒரு சபை ஸ்தாபிக்கும் நோக்கத் தோடு இப்படிச் செயல்படுகிறார்கள். இயேசுவானவர் உலகெங்கும் சென்று, ''*சகல ஜாதிகளையும் [இனக் கூட்டத்தாரையும்]* சீஷராக்கும் படி'' நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறபடியால், இது பாராட்டப்பட வேண்டிய காரியமாகும் [மத். 28:19]. பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதல் இல்லாவிட்டால், மனிதருடைய திட்டங்கள் எவ்வளவு தான் நல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், பெரும்பாலும் நன்மையைவிட தீமையையே அதிகம் விளைவிக்கின்றன. நாம் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதை நாடும்போது அவருடைய ஞானத்தைத் தேடுவது அத்தியாவசியமானதாகும். அவர் உலகெங்கிலும் சீஷராக்குவது குறித்த அதிகமான விவரங்களையும் போதனைகளையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

*தேவனே* எல்லோரையும்விடப் பெரிய நற்செய்தியாளர், நாம் அவரோடு *சேர்ந்து* ஊழியம் செய்ய வேண்டும், *அவருக்காக* அல்ல என்பதைப் பிரதான கட்டளையை நிறைவேற்ற முயலும் பலரும் மறந்து விடுகிறார்கள். அவர் மற்ற எல்லோரையும்விட உலகெங்கிலும்





சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பதில் அதிகக் கரிசனை கொண்டிருக்கிறார். எல்லோரையும்விட அவர் அதற்காக ஊக்கமாகக் கிரியைசெய்து வருகிறார். அவர் அதற்காக மரிக்குமளவுக்கு அதைக் குறித்து அதிக அக்கறை கொண்டிருக்கிறார். எல்லோரையும் சிருஷ்டிப் பதற்கு முன்பே அவர் இதற்காகத் திட்டமிட்டிருந்தார்! இதுவே ஒப்படைப்பாகும்!

## ''கிறிஸ்துவுக்காக உலகத்தை ஜெயித்தல்''

நாம் புதிய ஏற்பாட்டு நிருபங்களை வாசிக்கும்போது, இன்று அதிகமாகச் சொல்லப்படுவதுபோல, ''அங்கே சென்று உலகத்தைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த வேண்டும்'' என்பது குறித்த வேண்டு கோள்கள் அதிகமாகக் காணப்படவில்லை. *தேவன்* உலகத்தை மீட்டுக்கொள்ளும்படி அதிக முயற்சியோடு கிரியைசெய்து வருகிறார் என்பதைத் துவக்ககாலக் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவத் தலைவர் களும் உணர்ந்திருந்தார்கள். அவர் அவர்களை வழிநடத்தும்போது, அவருக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதே அவர்களுடைய பணியாகும். எல்லோரையும்விடப் பவுல் அப்போஸ்தலன் இதை நன்றாக அறிந்திருந்தார். அவர் ''எவராலும் ஆண்டவரிடத்தில் வழிநடத்தப்பட வில்லை.'' அவர் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் தேவனுடைய நேரடியான கிரியையின்மூலமாக மனமாற்றம் பெற்றார். நடபடிகளின் புத்தகம் முழுவதிலும், ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, ஆவியினால் வழிநடத்தப்பட்ட மக்கள் பரிசுத்த ஆவியானவரோடு சேர்ந்து ஒத்துழைத்தபோது சபைகள் எங்கும் பரவின என்பதைப் பார்க்கிறோம். ''அப்போஸ்தலருடைய நடபடிகள்'' என்று அழைக்கப்படும் புத்தகம் உண்மையில் ''தேவனுடைய நடபடிகள்'' என்றே அழைக்கப்பட வேண்டும். லூக்கா நடபடிகளின் புத்தகத்துக்கு முன்னுரையை எழுதும்போது தனது முதல் முயற்சியில் [அவருடைய பெயரிலுள்ள சுவிசேஷம்] இயேசுவானவர் ''செய்யவும் உபதேசிக்கவும் *தொடங்கின* எல்லாவற்றையுங்குறித்து'' எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார் [அப். 1:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. நடபடிகளின் புத்தகமானது இயேசு வானவர் *தொடர்ந்து* செய்ததையும் உபதேசித்ததையும் குறித்த புத்தகம் என்று லூக்கா விசுவாசித்தார். அவர் தம்மோடு ஒத்துழைத்த ஆவியான வரால் அபிஷேகிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்ட ஊழியர்களின் மூலமாக இதைச் செய்தார்.

துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் ''அங்கே சென்று, தங்கள் அயலாருக்குச் சாட்சி கூறி, உலகத்தைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப் படுத்தும்படி'' ஊக்குவிக்கப்படவில்லை என்றால், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த அவர்களுடைய பொறுப்பு என்ன? வெளியரங்கமாகச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி அழைக்கப்பட்டு வரம்பெற்ற அப்போஸ் தலர்களையும் சுவிசேஷகர்களையும் தவிர மற்றவர்கள் கீழ்ப்படிதலுள்ள

பரிசுத்த வாழ்க்கை வாழும்படி அழைக்கப்பட்டார்கள். தங்களிடம் விசுவாசத்தைக் குறித்துக் கேள்விகேட்கும் எல்லோருக்கும் பதில்சொல்ல அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பேதுரு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து; கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத் தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள் (1 பேதுரு 3:14–16).

பேதுரு எந்தக் கிறிஸ்தவர்களுக்கு இவைகளை எழுதினாரோ அவர்கள் துன்புறுத்தலை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள். என்றாலும், கிறிஸ்தவர்கள் உலகத்துக்கு வேறுபட்டவர்களாக இராவிட்டால் உலகத்தார் அவர்களைப் பகைக்க மாட்டார்கள். இன்று பல இடங்களிலும் துன்புறுத்தல்கள் குறைவாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் – ஏனென்றால் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் பலர் மற்றவர்களைவிட வேறுபட்டிருக்கவில்லை. அவர்கள் உண்மையில் கிறிஸ்தவர்களாக இல்லாத படியால் எவரும் அவர்களைத் துன்புறுத்துவதில்லை. என்றாலும் இப்படிப்பட்ட ''கிறிஸ்தவர்கள்'' பலருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் ''அவர்கள் தங்கள் விசுவாசத்தை அருகிலிருப்பவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும்'' என்ற போதனை கொடுக்கப்படுகிறது. அவர்கள் அப்படித் தங்கள் அண்டைவீட்டாருக்குச் சாட்சி கொடுக்கும்போது இவர்கள் உண்மையில் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள்தானா என்று அவர்கள் திகைப்படைகிறார்கள். இதைவிட மோசமான காரியம் என்னவென்றால் அவர்கள் போதிக்கும் சுவிசேஷத்தில் அவர்களுடைய நற்கிரியைகளுக்கும் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் அவர்களுடைய இரட்சிப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று போதிக்கப்படுகிறது. அவர்கள் ''இயேசுவைத் தங்கள் தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொண்டால்'' மட்டுமே போதும் என்று போதிக்கப்படுகிறது.

இதற்கு முரண்பாடாக, துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் (மெய்யாகவே இயேசுவானவரே அவர்களுக்கு ஆண்டவராக இருந்தார்)





இருளில் விளக்கைப்போலப் பிரகாசித்தார்கள். எனவே தங்கள் அண்டைவீட்டாருக்குத் தாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லுவதற்காக வகுப்புக்களை நடத்த வேண்டியிருக்கவில்லை, அவர்களிடம் சொல்லுவதற்கான துணிவைத் தேட வேண்டியிருக்கவில்லை. அவர்கள் நீதியோடு நடக்கிறார்கள் என்பதற்காகப் போற்றப்படும்போதும், அதைக்குறித்துக் கேள்விகள் கேட்கப்படும் போதும் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுவதற்கான அதிகமான வாய்ப்புக்களைப் பெற்றார்கள். பேதுரு சொல்லியதுபோல அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுவதும், தங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பேசுவதும் மட்டுமே போதுமானதாக இருந்தது.

நவீனக் கிறிஸ்தவர்களுக்கும் துவக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயுள்ள அடிப்படை வேறுபாடு இதுவாகும்: நவீனக் கிறிஸ்தவர்கள் தான் அறிந்திருப்பவைகளினாலும், விசுவாசிப்பதினாலும் வேறுபட்டிருக்கிறான் என்று நினைக்கிறார்கள், இதை நாம் கோட்பாடு என்று அழைக்கிறோம். எனவே அதைக் கற்பதின்மீது நமது மையப் பார்வையை வைத்திருக்கிறோம். இதற்கு முரண்பாடாக, துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் ஒரு கிறிஸ்தவன் அவன் எதைச் செய்கிறானோ அதில் வித்தியாசப்பட்டிருக்கிறான் என்று விசுவாசித்தார்கள். எனவே அவர்கள் கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். முதல் பதினான்கு நூற்றாண்டுகளில் எந்தக் கிறிஸ்தவரும் தனக்கெனச் சொந்தமாக வேதாகமத்தை வைத்திருக்கவில்லை என்பது சுவாரசியமான காரியமாகும். எனவே அவரால் ''ஒவ்வொரு நாளும் தனது வேதாகமத்தை வாசிக்க'' முடியாதிருந்தது. ஆனால் தற்காலத்திய கிறிஸ்தவப் பொறுப்பில் இது முக்கியமான இடத்தில் இருக்கிறது. இன்றைய கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் வேதாகமத்தை வாசிக்க வேண்டியதில்லை என்று நான் சொல்ல வரவில்லை. அதிகமான கிறிஸ்தவர்கள் வேதாகமத்துக்குக் கீழ்ப்படிவதைவிட அதை வாசிப்பதற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார்கள் என்பதையே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சரியான கோட்பாட்டைப் பெற்றிருப்பதற்காக நாம் பெருமைப்படுகிறோம் (ஆனால் மற்ற 29,999 சபைப்பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நமது நிலையை எட்டவில்லை). என்றாலும் இப்போதும் நாம் புறம்பேசுகிறோம், பொய்சொல்லுகிறோம், உலகப்பிரகாரமான பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறோம்.

மக்கள் சுவிசேஷத்தை அதிகமாக ஏற்றுக்கொள்ளும்படி அவர்களுடைய இருதயத்தை மென்மையாக்க விரும்புவோமானால், நமது கோட்பாடுகளின் மூலமாக அல்ல, நமது செயல்களின் மூலமாகவே அதைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

## மிகப் பெரிய சுவிசேஷகராகிய தேவன்

தேவன் தமது ராஜ்யத்தைக் கட்டுவதில் செய்துவரும் கிரியையைக் குறித்து இன்னும் விளக்கமாகப் பார்ப்போம். அவருடைய கிரியையை நாம் எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்ளுகிறோமோ அவ்வளவு சிறப்பாக அவரோடு ஒத்துழைக்க முடியும்.

மக்கள் இயேசுவை விசுவாசிக்கும்போது, தங்கள் இருதயத்தினால் அவர்கள் அதைச் செய்கிறார்கள் [பார்க்க, ரோமர் 10:9–10]. அவர்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கிறபடியால் மனந்திரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்தச் சித்தத்தைச் சிங்காசனத்திலிருந்து இறக்கி, இயேசுவின் சித்தத்தை அதில் ஏற்கிறார்கள். *விசுவாசிப்பது இருதயத்தில் மாற்றத்தை உள்ளடக்கியிருக்கிறது.*

இதைப்போலவே, மக்கள் இயேசுவை விசுவாசிக்காதபோது அதையும் அவர்கள் தங்கள் இருதயத்தினால் செய்கிறார்கள். அவர்கள் தேவனை எதிர்த்துநிற்கிறபடியால் மனந்திரும்புவதில்லை. அவர்கள் வேண்டுமென்றே தீர்மானம் எடுத்து, இயேசுவைத் தங்கள் இருயத்தின் சிங்காசனத்தில் ஏற்றாமலிருக்கிறார்கள். *அவநம்பிக்கை என்பது இருதயத்தை மாற்றாமலிருக்கும்படியான தொடர்ந்த தீர்மானத்தை உள்ளடக்கியிருக்கிறது.*

பிதாவானவரால் இழுக்கப்படாவிட்டால் எவரும் தம்மிடம் வராத அளவுக்குக் கடினமான இருதயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று இயேசுவானவர் சுட்டிக்காட்டியிருக்கிறார் [பார்க்க, யோவான் 6:44]. தேவன் இரக்கத்தோடும் தொடர்ந்தும் பல்வேறு வழிகளின்மூலமாக எல்லோரையும் இயேசுவை நோக்கி இழுத்துக்கொண்டுதான் இருக்கிறார். இவை எல்லாமே அவர்களுடைய இருதயத்தைத் தொடுகின்றன. அவர்கள் தங்கள் இருதயத்தை மென்மையாக்குவதையோ அல்லது கடினமாக்குவதையோ தொடர்ந்து தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

மக்களை இயேசுவிடம் இழுப்பதற்காக அவர்களுடைய இருதயத்தைத் தொடுவதற்குத் தேவன் பயன்படுத்தும் வழிவகைகள் எவை?

முதலாவதாக, அவர் தமது சிருஷ்டிப்பைப் பயன்படுத்துகிறார். பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். *எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்*; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை [ரோமர் 1:18–20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].





மக்கள் அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியத்தை அடக்கிவைக்கிறார்கள் என்று பவுல் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, சத்தியம் அவர்களுக்குள்ளேயிருந்து எழுந்து அவர்களை எதிர்நோக்குகிறது. என்றாலும் அவர்கள் அதை அடக்கி, உள்ளான உணர்த்துதலை எதிர்த்து நிற்கிறார்கள்.

எல்லோருக்குள்ளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியம் என்ன? அவை ''உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினால்'' வெளிப்படுத்தப்படும் தேவனுடைய காணப்படாத பண்புகளாகிய நித்திய வல்லமை, தேவத்துவம் குறித்த சத்தியங்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார். தேவனுடைய சிருஷ்டியைப் பார்ப்பதின்மூலமாக அவர் இருக்கிறார் என்பதை மக்கள் உள்ளாக அறிந்திருக்கிறார்கள்.[98] அவர் அதிக வல்லமையானவர், அற்புதவிதமான ஆக்கும் திறன் கொண்டவர், நம்பமுடியாத அளவுக்கு அறிவுள்ளவர், ஞானமுள்ளவர் போன்ற பல காரியங்களை அவர்கள் அறிந்துகொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை என்று பவுல் சொல்லுகிறார், அது உண்மைதான். தேவன் தம்மை வெளிப்படுத்தி, மக்கள் தங்கள் இருதயத்தை மென்மையாக்கும்படி தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் பெரும்பாலானவர்கள் தங்கள் காதுகளை மூடிக்கொள்ளுகிறார்கள். என்றாலும், தேவன் தொடர்ந்து அவர்களுடைய வாழ்க்கையில் தமது அற்புதங்களின்மூலமாகக் குரல் கொடுத்துக்கொண்டிருப்பதை நிறுத்துவது கிடையாது – மலர்கள், பறவைகள், குழந்தைகள், பனித்துகள், வாழைப்பழங்கள், ஆப்பிள், இன்னும் இலட்சக்கணக்கான காரியங்கள்.

தேவன் இருப்பாரானால், அவர் அவருடைய சிருஷ்டி வெளிப்படுத்துகிறபடி பெரியவராக இருப்பாரானால், கண்டிப்பாக அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். உள்ளான வெளிப்பாடானது ஒரே செய்தியைக் குறித்துக் குரல் கொடுக்கிறது: *மனந்திரும்பு*! இதன்

[98] எனவேதான் வேதவசனம், ''தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்'' என்று சொல்லுகிறது [சங். 14:1 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. மதிகேடர்கள் மட்டுமே இப்படிப்பட்ட வெளிப்படையான சத்தியத்தை அடக்குகிறார்கள்.

காரணமாக எல்லோரும் ஏற்கெனவே மனந்திரும்புதலுக்கான அழைப்பைக் கேட்டிருக்கிறார்கள் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

> இப்படியிருக்க, அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன்; கேள்விப்பட்டார்கள்; அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறதே (ரோமர் 10:18).

பவுல் உண்மையில் 19ஆம் சங்கீதத்திலுள்ள நன்கு அறியப்பட்ட வசனத்தையே மேற்கோளாகக் கொடுத்திருக்கிறார். அந்த வசனம் இப்படிச் சொல்லுகிறது:

> வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. *ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது* (சங். 19:1–4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இது தேவன் இரவும் பகலும் தமது சிருஷ்டிகளின் மூலமாக எல்லோருடனும் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. தேவனுடைய சிருஷ்டிப்பு கொடுக்கும் செய்திக்கு மக்கள் சரியான வகையில் செவிசாய்ப்பார்களானால், அவர்கள் முகங்குப்புற விழுந்து, இப்படிக் கதறுவார்கள்: ''மேன்மையான சிருஷ்டிகரே, நீர் என்னைச் சிருஷ்டித்திருக்கிறீர். உமது சித்தத்தைச் செய்யும்படி சிருஷ்டித்திருக்கிறீர் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே உமக்கு என்னைக் கீழ்ப்படுத்துகிறேன்!''

## தேவன் பேசும் மற்றொரு வழி

இந்த வெளியானதும் உள்ளானதுமான வெளிப்பாட்டுடன் மற்றொரு உள்ளான வெளிப்பாடு தொடர்புள்ளதாக இருக்கிறது. இதுவும் தேவனால் கொடுக்கப்படும் ஒன்றாகும். இது தேவனுடைய சிருஷ்டிப்பின் அதிசயத்தைச் சார்ந்திருக்கவில்லை. இந்த உள்ளான வெளிப்பாடு ஒருவருடைய மனச்சாட்சியாகும். இந்தக் குரல் தொடர்ந்து தேவனுடைய பிரமாணத்தை வெளிப்படுத்துகிறது. பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:





> அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும் (ரோமர் 2:14–16).

இப்படியாக, எல்லோரும் எது சரி, எது தவறு என்பதை அறிந்திருக்கிறார்கள். அதாவது, எல்லோரும் எது தேவனைப் பிரியப்படுத்துகிறது, எது அவரைப் பிரியப்படுத்துவதில்லை என்பதை அறிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்களை, தமக்குப் பிரியமில்லாதவை என்று அவர்கள் அறிந்தும் செய்த காரியங்களுக்காகக் கடைசி நியாயத்தீர்ப்பின்போது தேவன் கணக்குக்கொடுக்க வைப்பார். மக்கள் வளர, வளரத் தங்கள் பாவங்களை நியாயப்படுத்துவதில் அதிகத் திறமைசாலிகளாக ஆகிறார்கள். தங்கள் மனச்சாட்சியின் சத்தத்தைப் புறக்கணிக்கிறார்கள். என்றாலும் தேவன் தொடர்ந்து தமது பிரமாணங்களை அதன்மூலமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்.

## மூன்றாவது வழி

ஆனால் இது மட்டுமல்ல. எல்லோரையும் மனந்திரும்பும்படி செய்வதற்காகக் கிரியைசெய்துகொண்டிருக்கும் மிகப்பெரிய நற்செய்தியாளராகிய தேவன் மற்றொரு வழியின் மூலமாகவும் மக்களோடு பேசுகிறார். மறுபடியுமாக, பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற *மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது* (ரோமர் 1:18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

தேவனுடைய கோபம் வெளிப்படுத்தப்பட்டிருக்*கிறது* என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். அது இனிமேல் ஒருநாளில் வெளிப்படுத்தப்படப் *போவதில்லை*. மனிதர்களைப் பாதிக்கும் பல சிறியதும் பெரியதுமான துக்கமான சோக நிகழ்ச்சிகளின் மூலமாகத் தேவனுடைய கோபாக்கினை எல்லோருக்கும் வெளிப்படுத்தப்

பட்டிருக்கிறது. தேவன் சர்வவல்லவராக இருப்பாரானால், அவரால் எதையும் செய்ய முடியும், தடுக்க முடியும் என்றிருக்குமானால், அவரைப் புறக்கணிப்பவர்களை இப்படிப்பட்டவை தாக்கும்போது, அவை அவருடைய கோபாக்கினையின் விளைவுகளாக மட்டுமே இருக்க முடியும். உணர்வில்லாத இறையியலாளர்களாலும், மூடத்தனமான தத்துவஞானிகளாலும் மட்டுமே இதைக் காண முடியாது. என்றாலும், தேவனுடைய கோபாக்கினையிலும்கூட அவருடைய இரக்கமும் அன்பும் வெளிப்படுத்தப்படுகிறது. அவர்கள் தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளாகக் கூடியவர்களாக இருந்தாலும், அவர்களுக்குத் தகுதியான கோபாக்கினை காட்டப்படாமல் குறைவாகவே காட்டப்படுகிறது. இப்படியாக மனந்திரும்பாமலிருக்கிறவர்களுக்கு மரணத்துக்குப் பின்னர் காத்திருக்கும் நித்திய கோபாக்கினையைக் குறித்து அவர்களுக்கு அன்போடு உணர்த்தப்படுகிறது. மனந்திரும்ப வேண்டிய மக்களின் கவனத்தைக் கவருவதற்காகத் தேவன் பயன்படுத்தும் மற்றொரு வழி இதுவாகும்.

### நான்காவது வழி

இறுதியாக, தேவன் மக்களைச் சிருஷ்டி, மனச்சாட்சி, மற்றும் அழிவுகளின் மூலம் இழுக்க முயலுவதோடு மட்டுமல்லாமல், சுவிசேஷத்தின் அழைப்பின் மூலமாகவும் இழுக்க முயலுகிறார். அவருடைய சேவகர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, நற்செய்தியை அறிவிக்கும்போது மறுபடியுமாக, சிருஷ்டி, மனச்சாட்சி, அழிவு இவை கொடுக்கும் செய்தி உறுதிப்படுத்தப்படுகிறது: *மனந்திரும்பு!*

தேவன் நற்செய்தியை அறிவிப்பதோடுகூட நாம் நற்செய்தி ஊழியம் செய்வதை ஒப்பிடும்போது அது ஒப்பிடுவதற்கு ஒன்றுமில்லாததாக இருப்பதையே நாம் காண்கிறோம். அவர் தொடர்ந்து ஒவ்வொரு நபருக்கும், அவருடைய வாழ்நாளில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் நற்செய்தியை அறிவித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் மிகப் பெரிய சுவிசேஷகரும்கூட ஒருசில ஆண்டுகளில் சில இலட்சக் கணக்கானவர்களுக்கு மட்டுமே நற்செய்தியை அறிவிக்க முடியும். இப்படிப்பட்ட சுவிசேஷகர்களும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு மக்கள் குழுவுக்கு மட்டுமே செய்தி கொடுக்கிறார்கள். உண்மையில், இப்படிப்பட்ட சுவிசேஷகர்களுக்கு ஓரிடத்தில் ஒரு வாய்ப்பு மட்டுமே கொடுக்கப்படுகிறது. அங்கே மக்கள் செவிசாய்க்கிறவர்களாக இராவிட்டால், இயேசுவின் கட்டளைப்படி அவர்கள் தங்கள் காலின் தூசியை உதறிவிட்டு மற்றொரு பட்டணத்துக்கோ அல்லது கிராமத்துக்கோ செல்ல வேண்டியிருக்கும் [பார்க்க, மத். 10:14]. தேவனுடைய ஒருபோதும் முடிவடையாத, உலகளாவிய, அற்புதமான மற்றும் உள்ளாக உணர்த்தும் நற்செய்திப்பணியோடு நமது கட்டுப்பாடு





களுக்கு உட்பட்ட நற்செய்திப் பணியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒப்பிடுவதற்கே ஒன்றுமில்லை என்பதை உணர்த்துவதற்காகவே இவை எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்தப் பார்வையானது சுவிசேஷ ஊழியத்திலும், தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதிலும் நமக்குரிய பொறுப்பைச் சிறப்பாகப் புரிந்து கொள்ள உதவுகிறது. என்றாலும், நமது பங்கைக் குறித்து நாம் இன்னும் விரிவாகப் பார்ப்பதற்கு முன்பாக மற்றொரு முக்கியமான காரியத்தைப் பார்க்க வேண்டும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி மக்கள் தங்கள் இருதயத்தின்மூலம் மனந்திரும்பி, விசுவாசிக்கிறார்கள். எல்லோரும் தன்னைத்தான் தாழ்த்தி, தனது இருதயத்தை மென்மையாக்கி, மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இதற்காகவே, இப்போது விவரிக்கப்பட்டுள்ள பல வழிகளின்மூலமாகத் தொடர்ந்து மக்களின் இருதயங்களில் கிரியை செய்துகொண்டிருக்கிறார்.

மேலும், தேவன் ஒவ்வொருவரின் இருதயத்தின் நிலைமையையும் அறிந்திருக்கிறார். யாருடைய இருதயம் மென்மையாகிறது, யாருடைய இருதயம் கடினமாகிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார். யார் அவருடைய ஒருபோதும் முடிவுராத செய்தியைக் கேட்கிறார்கள், யார் புறக்கணிக்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். யாருடைய இருதயமானது வாழ்க்கையில் ஒரு சிறிய அழிவைச் சந்தித்தால் மென்மையாகி, மனந்திரும்பும் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். யாருடைய இருதயம் மனந்திரும்புதலுக்கான நம்பிக்கையே இல்லாமல் கடினப்பட்டுப் போயிருக்கிறது என்பதையும் அவர் அறிவார். [எடுத்துக்காட்டாக, இஸ்ரவேலரின் இருதயம் மனந்திரும்ப முடியாமலிருப்பதால் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டாம் என்று தேவன் மூன்று முறை எரேமியாவிடம் சொல்லியிருக்கிறார்; பார்க்க, எரே. 7:16; 11:14; 14:11].[99] ஆவியானவரின் உணர்த்துதலை இன்னும் கொஞ்சம் பெற்றால் யாருடைய இருதயம் மனந்திரும்புமளவுக்கு மென்மையாகியிருக்கிறது என்பதையும் அவர் அறிவார்.

இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, சுவிசேஷத்தை அறிவிப்பதிலும், தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதிலும் சபைக்குரிய பொறுப்பைக் குறித்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும்?

[99] தேவனுக்கு விரோதமாகத் தங்கள் இருதயத்தைத் தொடர்ந்து கடினப்படுத்துகிறவர்களின் இருதயத்தைத் தேவன் இன்னும் அதிகமாகக் கடினப்படுத்துவார் [பார்வோனைப்போல] என்றே வேதவசனம் போதிக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் மனந்திரும்புவதற்கு எந்த வாய்ப்பும் இருப்பதில்லை.

**கொள்கை # 1**

முதலாவதாக, பெரிய நற்செய்தியாளராக நற்செய்திப் பணியின் 95 சதவீதத்தைச் செய்து, தொடர்ந்து ஒவ்வொருவரிடமும், ஒவ்வொரு நாளும் குரல்கொடுத்துக்கொண்டிருக்கும் தேவன், கடினமான இருதயத்தைக் கொண்டிருப்பவர்களைவிட ஏற்றுக்கொள்ளக் கூடிய இருதயமுடையவர்களிடம் தமது ஊழியர்களை அனுப்புவார் என்று எதிர்பார்க்க முடியுமா? முடியும் என்றே நான் நினைக்கிறேன்.

எல்லோருக்கும் அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் பிரசங்கித்துக்கொண்டிருக்கும் பெரிய சுவிசேஷகரான தேவன் பல ஆண்டுகளாகத் தான் சொல்லும் எல்லாவற்றையும் புறக்கணித்துக்கொண்டிருக்கும் மக்களிடம் சுவிசேஷத்தை அனுப்பும் சிரத்தையை *எடுக்காமலிருக்கவும்* கூடும் அல்லவா? அவர் அவர்களிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கும் 95 சதவீதமான செய்தியை அவர்கள் புறக்கணித்துக்கொண்டிருக்கும்போது, எஞ்சிய 5 சதவீதத்தை அவர்களுக்கு அறிவிக்கும்படி தமது முயற்சிகளை ஏன் வீணடிக்க வேண்டும்? அவர்களுடைய இருதயத்தை மென்மையாக் கும்படி தேவன் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பை அனுப்புவார் என்றே நான் நினைக்கிறேன். அப்படி அவர்களுடைய இருதயம் மென்மையாகும் போது அவர் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தமது ஊழியர்களை அவர் களிடம் அனுப்புவார் என்று நினைப்பது தர்க்கரீதியாகச் சரியாக இருக்கிறது.

தேவன் மனந்திரும்ப மாட்டார்கள் என்று தாம் அறிந்தவர் களிடமும் நற்செய்தியை அறிவிக்கும்படி அனுப்புவார், அப்போது அவர்கள் அவருக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் நிற்கும்போது சாக்குப் போக்குச் சொல்ல இடமிருக்காது என்று சிலர் சொல்லுகிறார்கள். என்றாலும், அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் தமது சிருஷ்டிப்பின் மூலம் ஏற்கெனவே தம்மைக் குறித்து வெளிப்படுத்திக்கொண்டிருக் கிறபடியால் அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள் [பார்க்க, ரோமர் 1:20]. இப்படியாக தேவன் இப்படிப்பட்ட மக்களிடம் தமது ஊழியர்களில் ஒருவரை அனுப்பு வாரானால், அவர்கள் கணக்குக்கொடுக்க வேண்டியவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக அல்ல, அவர்கள் இன்னுமதிகமாகக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே யாகும்.

தேவன் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கும் மக்களிடமே தமது ஊழியர்களை அதிகமாக அனுப்புவார் என்பது உண்மையாக இருக்குமானால், அவருடைய ஊழியர்களாகிய நாம், அவர் அறுவடைக்கு ஆயத்தமாக இருப்பவர்களிடம் ஞானத்தோடு நம்மை அனுப்ப வேண்டும் என்று ஜெபத்தோடு வேண்டிக்கொள்ள வேண்டும்.





**ஒரு வேதாகமரீதியான எடுத்துக்காட்டு**

நடபடிகளின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிலிப்புவின் ஊழியத்தில் இது சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது. பிலிப்பு ஏற்கெனவே சமாரியாவில் ஏற்றுக்கொள்ளக் கூடிய மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்திருந்தார். பிறகு ஒரு தேவதூதனின் மூலம் ஒரு குறிப்பிட்ட சாலைக்குச் செல்லும்படி அவர் வழிநடத்தப்பட்டார். அங்கே ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தேடிக்கொண்டிருந்த ஒருவனிடம் அற்புதமான வகையில் வழிநடத்தப்பட்டார்:

> பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்குத் திரும்பிப் போகும்போது, தன் இரதத்தில் உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந் தான். ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்:
>
> > அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டி யைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.
>
> அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக்

குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுவதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமார னென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் [அப். 8:26–39].

அதிகமான ஆவிக்குரிய தாகத்தைக் கொண்டிருந்த ஒரு மந்திரிக்கு ஊழியம் செய்யும்படி பிலிப்பு தெய்வாதீனமாக வழிநடத்தப் பட்டார். அந்த மந்திரி தனது ஆவிக்குரிய தாகத்தின் காரணமாகத் தேவனை ஆராதிக்கும்படி எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமுக்குப் பயணமாக வந்திருந்தான், அவன் ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் அடங்கிய ஒரு தோல் சுருளை விலைகொடுத்து வாங்கியிருந்தான். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பாவ நிவாரண மரணம் குறித்து அதிகமாக வெளிப்படையாக அறிவிக்கும் ஏசாயா 53ஆம் அதிகாரத்தை அவன் வாசித்து, அதில் என்ன சொல்லியிருக்கிறது என்பதைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தபோது, அவனுக்கு விளக்கம் கொடுக்கும்படியாகப் பிலிப்பு அங்கே அனுப்பப்பட்டார். அங்கே அவர் மனமாற்றத்துக்கு ஆயத்தமாக இருந்த ஒருவனைக் கண்டார். தேவன் அவனுடைய இருதயத்தை அறிந்து, பிலிப்புவை அவனிடத்தில் அனுப்பியிருந்தார்.

### ஒரு சிறப்பான வழி

வேறு வகையில் அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க முடியாது என்ற எண்ணத்தில் நாம் ஏற்றுக்கொள்ளாத மக்களுக்கு ஒழுங்குரீதியாகவோ அல்லது முறைசாராமலோ சுவிசேஷத்தை அறிவிப்பதைவிட, ஏற்றுக்கொள்ளக் கூடிய மக்களிடம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது எவ்வளவு அதிகமான பயனைக்





கொடுக்கும்! நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் தேவன் ஓய்வில்லாமல் நற்செய்தியை அறிவித்திருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். எல்லோரும் ஏதேனும் ஒரு வகையில் குற்றத்தைக் குறித்து இடைபடுகிறபடியால், நாம் முதலில் ஒருவர் தேவனை ஏற்றுக் கொள்ளக் கூடியவராக இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதைக் கண்டறியும்படி அவருடைய மனச்சாட்சி அவரை எப்படி நடத்துகிறது என்பதைக் குறித்து அவரிடம் கேட்க வேண்டும்.

பேதுருவின் ஊழியத்தின்மூலம் கொர்நேலியுவின் வீட்டார் மனமாற்றம் பெற்றது இந்தக் கொள்கைக்கு மற்றுமொரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. புறஜாதியாரில் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருந்த இந்தக் குழுவினரிடம் பேதுரு இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் வழிநடத்தப்பட்டார். கொர்நேலியு தனது மனச்சாட்சிக்குச் செவிகொடுத்து, தேவனைத் தேடிய ஒருவனாக இருந்தான். அவனுடைய ஈகையிலிருந்தும் ஜெப வாழ்க்கையிலிருந்தும் இது தெரிகிறது [பார்க்க, அப். 10:2]. தேவன் அவனைப் பேதுருவோடு சேர்த்துவைத்தார். அவன் திறந்த இருதயத்தோடு பேதுருவின் செய்திக்குச் செவிசாய்த்து மகிமையாக மனந்திரும்பினான்.

நமது பட்டணத்தைப் பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு வீட்டுக்கும் சாட்சி கூறும் குழுவினரை அனுப்பும்படி விஸ்தாரமானதும் நேரத்தை வீணாக்குவதுமான திட்டத்தைத் தீட்டுவதற்கு மாறாக, திறந்த இருதயம் கொண்டவர்களிடம் வழிநடத்தும்படி பரிசுத்த ஆவியான வரிடம் வேண்டிக்கொள்ளுவது எவ்வளவு ஞானமுள்ள காரியமாக இருக்கும்! பேதுரு எருசலேமில் அருட்பணிச் செயல்தந்திரங்களைக் குறித்து விவாதிக்கும் ஒரு மாநாட்டில் கலந்துகொண்டிருந்தாலோ அல்லது பிலிப்பு தொடர்ந்து சமாரியாவில் பிரசங்கித்துக்கொண்டிருந் தாலோ, கொர்நேலியுவின் வீட்டாரும், எத்தியோப்பிய மந்திரியும் எட்டப்படாதவர்களாகவே இருந்திருப்பார்கள்.

சுவிசேஷகர்களும், அப்போஸ்தலர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ளாத மக்கள் கலந்திருக்கும் கூட்டத்துக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி வழிநடத்தப்படுவார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் அவர்கள் எங்கே பிரசங்கிக்கும்படி ஆண்டவர் விரும்புகிறார் என்பதை அறியும்படி ஜெபிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டும்போது, ஆவியான வரால் வழிநடத்தப்பட்டு, அவரால் அபிஷேகிக்கப்பட்ட மக்கள் அவருடன் ஒத்துழைப்பதைக் குறித்தே நடபடிகளின் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். நவீன சபையோடு ஒப்பிடும்போது துவக்ககாலச் சபையின் செயல்முறைகள் எவ்வளவாக வேறுபட்டிருந்தன. விளைவுகளும் எப்படியாக வேறுபட்டிருக்கின்றன! இப்படி வெற்றியைக் கொடுத்த மாதிரியை நாம் ஏன் பின்பற்றக்கூடாது?

## கொள்கை # 2

இந்த அத்தியாயத்தின் முதல் பகுதியில் நாம் பார்த்த வேதாகமக் கொள்கைகள் வேறு எப்படியெல்லாம் நற்செய்திப் பணியிலும், தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதிலும் நமது பங்குக்கு உதவியாக இருக்கின்றன?

சிருஷ்டியும், மனச்சாட்சியும், அழிவும் மனந்திரும்ப அழைக்கும் படியாகத் தேவன் வடிவமைத்திருப்பாரானால், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் தாங்கள் முரண்பாடான செய்தியைப் பிரசங்கிக்க வில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். என்றாலும் பலர் அப்படித்தான் செய்கிறார்கள்! *அவர்கள் பிரசங்கிப்பது தேவன் ஏற்கெனவே பாவிகளிடம் சொல்ல முயலும் ஒவ்வொன்றுக்கும் முரண் பாடானதாக இருக்கிறது!* வேதாகமரீதியல்லாத கிருபையைக் குறித்து அவர்கள் பிரசங்கிப்பது இறுதியில் நித்திய ஜீவனைப் பெறுவதற்குப் பரிசுத்தமும் தேவனுக்குக் கீழ்ப்படிதலும் முக்கியமில்லாதவை என்ற கருத்தையே ஆதரிப்பதாக இருக்கிறது. இரட்சிப்புக்காக மனந்திரும்பு தலின் அவசியத்தைக் குறிப்பிடாமலிருப்பதின் மூலமாகவும், கிரியைகளினால் இரட்சிப்பு இல்லை என்பதைப் பவுல் ஒருபோதும் அர்த்தம்கொள்ளாத வகையில் வலியுறுத்துவதின்மூலமாகவும் அவர்கள் மெய்யாகவே தேவனுக்கு விரோதமாகக் கிரியைசெய்கிறார்கள். மக்களை ஆழமான வஞ்சகத்துக்குள் வழிநடத்திப் பெரும்பாலும் அவர்களுடைய நித்திய அழிவுக்குக் காரணமாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் உண்மையில் இரட்சிக்கப்பட்டிராத வேளையில் தாங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற நிச்சயத்தைப் பெறுகிறார்கள். தேவனுடைய ஸ்தானாபதிகள் உண்மையில் அவருக்கு விரோதமாகச் செயல்படுவது எவ்வளவு வருத்தமான காரியம்!

''மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும்'' பிரசங்கிக்கும்படி இயேசுவானவர் நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார் [லூக்கா 24:47]. இந்தச் செய்தி தேவன் பாவியின் வாழ்நாள் முழுவதும் கொடுத்து வந்திருக்கும் செய்தியை உறுதிப்படுத்துகிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது கடினமான இருதயத்தைக் கொண்டிருக் கும் மக்களின் இருதயத்தைத் தாக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நவீனகாலத்து மென்மையான சுவிசேஷம் தேவன் எவ்வளவாக அவர்களிடத்தில் அன்புகூருகிறார் என்பதை மக்களுக்குத் தெரிவிக் கிறது [நடபடிகளின் புத்தகத்தில் சுவிசேஷத்தை அறிவித்த எந்த அப்போஸ்தலரும் இதைக் குறிப்பிடவில்லை]. தேவன் தங்களிடம் கோபப்படவில்லை என்று அவர்கள் தவறாக நினைக்கும்படி செய்கிறது. அவர்கள் ''இயேசுவை ஏற்றுக்கொண்டால்'' மட்டுமே போதுமானது என்று பெரும்பாலும் அவர்களிடம் சொல்லப்படுகிறது. ஆனால் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவருக்கு நமது ஏற்றுக்கொள்ளுதல்





தேவையில்லை. ''நீ இயேசுவை ஏற்றுக்கொள்ளுகிறாயா?'' என்பது கேள்வியல்ல. ''இயேசு உன்னை ஏற்றுக்கொள்ளுகிறாரா?'' என்பதுதான் கேள்வியாகும். இதற்குப் பதில் என்னவென்றால், நீ மனந்திரும்பி அவரைப் பின்பற்றத் துவங்காவிட்டால், நீ அவருக்கு அருவருப்பாக இருக்கிறாய், அவருடைய இரக்கமே நீ உடனடியாக நரகத்துக்குப் போகாமல் தடுக்கிறது என்பதாகும்.

தேவனுடைய கிருபையை மலிவாக்கும் நவீன சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டுவரும் வேளையில், தேவனால் ஆளுகைசெய்யும் அதிகாரத்தைப் பெற்ற பல தலைவர்கள் ஆளுகைசெய்யும் நாடுகளில் [இதைக்குறித்து விவாதத்துக்கு இடமில்லை, பார்க்க, தானி. 4:17, 25, 32; 5:21; யோவான் 19:11; அப். 12:23; ரோமர் 13:1], மேற்கத்திய அருட்பணியாளர்கள் நுழைவதற்கு ஏன் முழுமையாக அனுமதி கொடுக்கப்படுவதில்லை என்று நான் வியப்படைகிறேன். தேவன் ஒருவேளை இந்தப் பொய்யான சுவிசேஷம் இந்த நாடுகளில் அறிவிக்கப்படுவதைத் தடுக்கிறாரோ?

## கொள்கை # 3

இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் நாம் கற்றுக்கொண்ட கொள்கை கள் தேவன் பொய்யான சமயங்களைப் பின்பற்றும் மக்களைக்குறித்து என்ன நினைக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளவும் நமக்கு உதவுகின்றன. இவர்கள் ஒருபோதும் சத்தியத்தைக் குறித்துக் கேள்விப்படாதபடியால் அறியாமையிலிருக்கும் இவர்களைக் குறித்து நாம் பச்சாதாபப்பட வேண்டுமா? அவர்களுக்கு ஆற்றலுள்ள வகையில் சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை என்ற குற்றம் முழுவதையும் சபையே ஏற்றுக்கொள்ள வேண்டுமா?

இல்லை, இப்படிப்பட்ட மக்கள் சத்தியத்தைக் குறித்த அறியாமை யில் இருக்கவில்லை. வேதாகமத்தை விசுவாசிக்கும் ஒரு கிறிஸ்தவர் அறிந்திருக்கும் எல்லாவற்றையும் அவர்கள் அறியாமலிருக்கலாம், ஆனால் தேவன் சிருஷ்டிப்பு, மனச்சாட்சி, அழிவு இவைளின் மூலம் தம்மைக் குறித்து வெளிப்படுத்தியுள்ள எல்லாவற்றையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு கிறிஸ்தவனைப் பார்த்திரா விட்டாலும், சுவிசேஷத்தைக் கேட்டிராவிட்டாலும், அவர்களுடைய வாழ்க்கை முழுவதிலும் தேவன் அவர்களை மனந்திரும்பும்படி அழைத்துவந்திருக்கிறார். மேலும், தேவனைக்குறித்து அவர்கள் தங்கள் இருதயத்தை மென்மைப்படுத்தியிருக்கிறார்கள் அல்லது கடினப்படுத்தி யிருக்கிறார்கள்.

அவிசுவாசிகளின் அறியாமையைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கும் பவுல் அப்போஸ்தலன் அதற்கான காரணத்தையும் இந்த வசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்:

> ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, *தங்கள் இருதய கடினத்தினால்* தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; *உணர்வில் லாதவர்களாய்,* சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள் [எபே. 4:17–19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

புறஜாதியாரின் ''இருதயக் கடினமே'' அவர்களுடைய அறியாமைக்குக் காரணம் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் ''உணர்வில்லாதவர்களாகவும்'' இருக்கிறார்கள் என்றும் பவுல் சொல்லி யிருக்கிறார். அவர் அவர்களுடைய இருதயத்தைப் பற்றியே இப்படிச் சொல்லுகிறார் என்பது தெளிவாகும். மக்களின் கைகளிலுள்ள மென்மையான தோலில் தொடர்ந்து ஏதாவது உரசிக்கொண்டிருக்கும் போது அது உணர்வற்றுத் தடித்துவிடுகிறது. இதைப்போலவே, மக்கள் தொடர்ந்து சிருஷ்டிப்பு, மனச்சாட்சி, அழிவு இவைகளின் மூலம் தேவன் அழைக்கும்போது அதைத் தொடர்ந்து எதிர்த்து நிற்பார்களா னால், அவர்களுடைய இருதயம் உணர்வில்லாததாக ஆகிவிடுகிறது. அவர்கள் தெய்வீக அழைப்பை உணரும் திறன் குறைந்துகொண்டே வருகிறது. எனவேதான் வயது அதிகமாக அதிகமாக மக்கள் அதிகமாக ஏற்றுக்கொள்ளுதலில் குறைவுபடுகிறவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஒருவர் வயது முதிர்ந்தவராக இருப்பாரானால், அவர் மனந்திரும்பு வதற்கான வாய்ப்பு குறைவுபடுகிறது. ஞானமுள்ள சுவிசேஷகர்கள் இளவயதினரையே இலக்காகக் கொண்டிருக்கிறார்கள்.

### விசுவாசியாமலிருப்பது என்ற குற்றம்

தேவன் மெய்யாகவே மக்களை நியாயந்தீர்ப்பது அவர்கள் ஒருபோதும் ஒரு கிறிஸ்தவ சுவிசேஷகரின் பேச்சைக் கேட்டிராவிட்டா லும் தேவன் அவர்களைக் குற்றவாளிகளாகக் கருதுகிறார் என்பதற்குக் கூடுதலான நிரூபணமாக இருக்கிறது. தேவன் அவர்கள் தங்கள் பாவங்களுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டும் என்று கருதாவிட்டால் அவர் அவர்களைத் தண்டிக்க மாட்டார். ஆனால் அவர் அவர்களைத் தண்டிக்கிறபடியால், அவர் அவர்களைக் கணக்குக்கொடுக்க வேண்டிய வர்களாக ஆக்குகிறார் என்ற நிச்சயம் நமக்கு உண்டு. அவர் அவர்களைக் கணக்குக்கொடுக்கிறவர்களாக ஆக்குகிறார் என்றால், தாங்கள் செய்யும் எந்தக் காரியங்கள் தேவனுக்குப் பிரியமில்லாதவை என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.





மனந்திரும்பும்படியான தமது அழைப்புக்கு எதிர்த்து நிற்பவர்களை இன்னுமதிகமான பாவகரமான இச்சைகளுக்கு ஒப்புக்கொடுத்து, இன்னும் மோசமான நிலையை அடையும்படி செய்வது தேவன் அவர் களைத் தண்டிப்பதில் ஒரு வழியாகும். பவுல் இப்படி எழுதுகிறார்:

> அவர்கள் *தேவனை அறிந்தும்,* அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியா மலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர் வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.
>
> இதனிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, *தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.* தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.
>
> இதினிமித்தம் *தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்;* அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றி னார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரக தாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற் குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார் கள்.
>
> தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவை களைச் செய்யும்படி, *தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.* அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத் தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலை யினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும்,

வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிற வர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிற வர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிற வர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறது மல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள் (ரோமர் 1:21–32 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

தேவனுக்கு முன்பாக மனிதருடைய குற்றத்தையும் கணக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்தையும் பவுல் எவ்வளவாக வலியுறுத்துகிறார் என்பதைக் கவனியுங்கள். அவிசுவாசிகள் ''தேவனை அறிந்திருந்தும்'' ''அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருக்கிறார்கள்.'' ''தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள்'', அப்படியானால் அவர்கள் தேவனுடைய சத்தியத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும். எனவே தேவன் அவர்களை இன்னுமதிகமதிகமான அழிவுக்கு ''ஒப்புக்கொடுத்தார்.'' மக்கள் பாவத்துக்கு ஆழமாக அடிமைப்பட்டிருக்கும்போது இயல்புக்கு அப்பாற்பட்டதும், இயல்புக்கு விரோதமானதுமான காரியங்களைச் செய்கிறார்கள். இப்படியாகத் தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்திருக் கிறார். தேவன் அவர்களிடம் ''என்னைச் சேவிக்க விரும்பும் நீ பாவத்தைச் சேவிக்க விரும்புகிறாயா? அப்படியானால் செய். நான் உன்னைத் தடுக்க மாட்டேன். நீ படிப்படியாக நீ விரும்பும் கடவுளுக்கு இன்னுமதிகமாக அடிமைப்பட்டுப் போவாய்'' என்று சொல்லுவது போலிருக்கிறது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் இப்படிப்பட்ட வடிவமும் அவருடைய இரக்கத்தையே சுட்டிக்காட்டுகிறது என்று ஒருவர் கருத வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் மக்கள் இன்னுமதிகமாகப் பாவத்தில் விழும்போது அதை உணர்ந்து, விழிப்படைய வாய்ப்பிருக்கிறது. ஏன் ஒருபாலுறவில் ஈடுபடுகிறவர்கள் ஏன் தங்களுக்குத் தாங்களே ''நான் ஏன் என்னுடைய பாலைச் சேர்ந்தவர் களிடம் ஈர்க்கப்படுகிறேன்? அவர்களோடு நான் இயல்பான பாலுறவைக் கொள்ள முடியாதே? இது அருவருப்பாக இருக்கிறதே?'' என்று கேட்டுக் கொள்ளவில்லை என்று ஒருவர் திகைப்படையலாம். (தங்கள் வக்கிரத்தை





நியாயப்படுத்த அவர்கள் தாங்கள் அப்படிப் படைக்கப்பட்டிருப்பதாக விவாதிப்பதுபோல) ஒருவர் தேவன் ஏன் ''அவர்களை அப்படிச் சிருஷ்டித்தார்'' என்று விவாதிக்கலாம். அவர்கள் மனந்திரும்பி அவருடைய அற்புதமான இரக்கத்தை அனுபவிக்கும்படியாகவே அவர் அவர்களை இந்த வக்கிரங்களுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

ஒருபாலுறவில் ஈடுபடுகிறவர்கள் மட்டுமே தங்களுக்குத் தாங்களே இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றில்லை. தம்மைச் சேவிக்க மறுக்கிறவர்களின்மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிரூபிக்கும் பல பாவங்களைப் பவுல் அப்போஸ்தலன் பட்டியலிட்டிருக் கிறார். தங்கள் வித்தியாசமான நடத்தைகளைக் குறித்துக் கோடிக்கணக் கான மக்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டியிருக் கிறது. ''நான் ஏன் என் சொந்தக் குடும்பத்தை வெறுக்கிறேன்?'' ''பொய்யான செய்திகளைப் பரப்புவதில் நான் ஏன் திருப்தியடைகிறேன்?'' ''ஏன் என்னிடம் இருப்பதைக் கொண்டு நான் ஒருபோதும் திருப்தியடை வதில்லை?'' ''நான் ஏன் இன்னுமதிகமான ஆபாசப் படங்களைப் பார்ப்பதை நாடுகிறேன்?'' தேவன் இவர்கள் எல்லோரும் தங்கள் கடவுளுக்கு அடிமைப்பட்டிருக்கும்படி ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

எவரும் எந்த வேளையிலும் தனது இருதயத்தை மென்மையாக்கி, மனந்திரும்பி, இயேசுவை விசுவாசிக்க முடியும் என்பது உண்மைதான். உலகத்திலேயே கடினமான பாவிகளாக இருந்தவர்கள் அதைச் செய்திருக் கிறார்கள். தேவன் அவர்களைச் சுத்திகரித்து, அவர்களின் பாவங்களி லிருந்து அவர்களை விடுவித்திருக்கிறார்! மக்கள் சுவாசிக்கக்கூடியவர் களாக இருக்கும் வரையில் அவர்கள் மனந்திரும்புவதற்கான வாய்ப்பைத் தேவன் கொடுக்கிறார்.

### சாக்குச் சொல்ல இடமில்லை

பவுலைப் பொருத்தவரையில் பாவிகள் சாக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்கும் போது தாங்கள் எது சரி, எது தவறு என்பதை அறிந்திருப்பதை வெளிப் படுத்துகிறார்கள். எனவே தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு அவர்கள் தகுதியானவர்களாக இருக்கிறார்கள்:

ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாய்த் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்

> பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளி களென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலா மென்று நினைக்கிறாயோ? அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணு கிறாயோ? [ரோமர் 2:1–4].

மக்கள் மனந்திரும்பும்படியான வாய்ப்பைக் கொடுப்பதே தேவன் நீடியபொறுமையோடு இருப்பதற்குக் காரணம் என்று பவுல் சொல்லியிருக்கிறார். மேலும் அவர் தொடர்ந்து, மனந்திரும்பி பரிசுத்த மான வாழ்க்கை வாழுகிறவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியும் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்:

> உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற் கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே தேவன் அவனவனுடைய கிரியைக்குத்தக்கதாய் அவனவனுக் குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும் [ரோமர் 2:5–10].

''வெறுமனே இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறவர் களுக்கு'' நித்தியஜீவன் உண்டென்று போதிக்கிறவர்களைப் பவுல் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மாறாக, தேவன் மனந்திரும்பி ''சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.''

ஆனால் மக்கள் மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் தொடர்ந்து மற்றச் சமயங்களைப் பின்பற்றிக்கொண்டிருந்தாலும் ஒருவர் இரட்சிக்கப்படுவார் என்பதை இது சுட்டிக்காட்டவில்லையா?





இல்லை, இயேசுவில்லாமல் இரட்சிப்பில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இதில் ஒன்று இயேசுவால் மட்டுமே மக்களைப் பாவத்துக்கு அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விடுவிக்க முடியும்.

ஆனால் அவர்கள் மனந்திரும்பும்படி விரும்பினாலும், இயேசுவைக் குறித்து ஒருபோதும் கேள்விப்பட்டிராவிட்டால் எப்படி அவருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள முடியும்?

மக்களுடைய இருதயங்களை அறிந்திருக்கும் தேவன் ஒருவர் மெய்யாகவே தம்மைத் தேடுவதை அறிவாரானால், அவருக்குத் தம்மை வெளிப்படுத்துவார். ''தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்'' என்று இயேசுவானவர் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார் [மத். 7:7]. எல்லோரும் தம்மைத் தேடுவதைத் தேவன் எதிர்பார்க்கிறார் [பார்க்க, அப். 17:26–27]. தமது தொடர்ந்த நற்செய்திப் பணியின் விளைவாக ஒருவருடைய இருதயம் செவிசாய்க்கக்கூடிய நிலையில் இருப்பதை அவர் அறியும்போது, அவர் எத்தியோப்பிய மந்திரிக்கும், கொர்நேலியு வின் வீட்டாருக்கும் அனுப்பியதுபோல அவனுக்குச் சுவிசேஷத்தை அனுப்புவார். சபை பங்குகொள்ளுவதோ அல்லது பங்குகொள்ளாமல் இருப்பதோ தேவனைக் கட்டுப்படுத்துவதில்லை. தர்சு பட்டணத்துச் சவுலின் மனமாற்றத்தில் இது தெளிவாகிறது. உண்மையாகத் தேடும் ஒருவருக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல ஒருவரும் இல்லாவிட்டால் தேவன்தாமே எடுத்துச் செல்லுவார்! இன்றும்கூட மூடப்பட்டிருக்கும் நாடுகளிலுள்ள மக்கள் இயேசுவின் தரிசனத்தினால் மனமாற்றம் பெற்றிருக்கும் பல எடுத்துக்காட்டுகளை நான் கேட்டிருக்கிறேன்.

### மக்கள் ஏன் சமயவாதிகளாக இருக்கிறார்கள்

பொய்யான சமயங்களைப் பின்பற்றுகிறவர்களில் பெரும்பாலான வர்கள் சத்தியத்தை உண்மையில் தேடுகிறவர்களாக இருக்கவில்லை என்பதே உண்மையாகும். அவர்கள் தங்கள் பாவங்களை நியாயப்படுத்து வதற்காக அல்லது அவைகளை மூடுவதற்காகச் சமயவாதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து தங்கள் மனச்சாட்சியை மீறும்போது சமயம் என்ற போர்வைக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளுகிறார்கள். தங்கள் சமயத்தின்மூலமாகத் தாங்கள் நரகத்துக்குத் தகுதியானவர்கள் அல்ல என்று தங்களுக்குத் தாங்களே உறுதிப் படுத்திக்கொள்ளுகிறார்கள். பௌத்தர்கள், இஸ்லாமியர், இந்துக்களைப் போல சமயப்பிரகாரமான ''கிறிஸ்தவர்களுக்கும்'' கூட இது உண்மையாக இருக்கிறது [மலிவான கிருபையின் சுவிசேஷக் கிறிஸ்தவர்கள் உட்பட]. அவர்கள் தங்கள் சமயத்தைச் செயல்படுத்தும்போது அவர்களுடைய மனச்சாட்சியும்கூட அவர்களைக் குற்றப்படுத்துகிறது.

புத்த சமயத்தைப் பின்பற்றும் ஒருவர் தனது விக்கிரகங்களுக்கு முன்போ அல்லது தனக்கு முன்பாகப் பெருமையோடு வீற்றிருக்கும்

துறவிகளுக்கு முன்போ பயபக்தியோடு பணியும்போது, அவருடைய மனச்சாட்சி அவர் செய்வது தவறு என்று சொல்லுகிறது. ஒரு இந்து நோயில் வாடும் ஒரு தெருப் பிச்சைக்காரனுக்கு மனதுருக்கம் காட்டாமல் அவன் முற்பிறவியில் செய்த பாவங்களின் காரணமாகவே அவதிப்படுகிறான் என்று நினைக்கும்போது அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. ஒரு இஸ்லாமிய தீவிரவாதி அல்லாவின் பெயரால் அவிசுவாசியான ஒருவனின் தலையை வெட்டும்போது, அவனுடைய கொலைசெய்யும் மாய்மாலத்துக்காக அவனுடைய மனச்சாட்சி அவனைப் பார்த்துக் குரல் கொடுக்கிறது. சுவிசேஷக் ''கிறிஸ்தவர்கள்'' உலகப்பிரகாரமான செல்வங்களைச் சேர்த்துவைக்கும்போது, ஆபாசக் காட்சிகளைக் கொண்ட தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்க்கும்போது, சக சபை உறுப்பினர் களைக் குறித்துப் புறம்பேசும்போது, தான் கிருபையினால் இரட்சிக்கப் பட்டிருப்பதாக நம்பும்போது அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. தாங்கள் நம்பக்கூடிய சமயப் பிரகாரமான பொய்களின் மூலம் தாங்கள் தொடர்ந்து பாவத்தில் ஈடுபடலாம் என்று நினைப்பவர் களைக் குறித்த எடுத்துக்காட்டுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. மறுபடியும் பிறவாத, ஆனால் சமயப்பிரகாரமான மக்களின் ''நீதி'' தேவனுடைய எதிர்பார்ப்புக்கு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

தேவன் பொய்யான சமயங்களைப் பின்பற்றும் மக்களை, அவர்கள் ஒருபோதும் சத்தியத்தைக் கேட்டிராதபடியால், பச்சாதாபம் காட்டப்பட வேண்டிய அறியாமையின் மக்கள் என்று நினைக்கவில்லை என்று காட்டுவதற்காகவே இவையெல்லாம் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய அறியாமைக்குச் சபையானது ஆற்றலோடு சுவிசேஷத்தை அறிவிக்காததே காரணம் என்றும் சொல்லப்படவில்லை.

மறுபடியுமாக, சபையானது உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நாம் அறிந்திருந்தாலும், ''எங்கே வயல்கள் அறுப்புக்காக ஆயத்தமாக இருக்கின்றன'' என்பதைக் கட்டுவதற்காக நாம் பரிசுத்த ஆவியான வரின் வழிநடத்துதலைப் பின்பற்ற வேண்டும் [பார்க்க, யோவான் 4:35]. அங்கே மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள், ஏனென்றால் தேவனுடைய ஓய்வில்லாத முயற்சிகளின் காரணமாக அவர்கள் தங்கள் இருதயத்தை மென்மையாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

### கொள்கை # 4

இந்த அத்தியாயத்தின் துவக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேதாகமச் சத்தியங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய இறுதியான ஒரு கொள்கை இதுவாகும்: பாவிகள் தங்கள் இருயத்தை மென்மையாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு தேவன் பாவிகளை





நியாயந்தீர்த்துக்கொண்டிருப்பாரானால், தேவனுடைய நியாயத்தீர்ப்பை அனுபவித்தபிறகு அல்லது மற்றவர்கள் அதை அனுபவிப்பதைக் கண்ட பிறகு. பாவிகளில் சிலர் தங்கள் இருதயத்தை மென்மையாக்கிக் கொள்ளுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியும். எனவே அழிவுகளுக்குப் பிறகு முன்பு எட்டமுடியாதவர்களாக இருந்தவர்களை இப்போது எட்ட முடியும்.

மக்கள் துன்பப்படும் இடங்களில் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுவதற்கான வாய்ப்புக்களை நாட வேண்டும். எடுத்துக் காட்டாக, சமீபத்தில் அன்புக்குரிய ஒருவரை இழந்திருப்பவர்கள், தேவன் அவர்களுக்குச் சொல்ல விரும்புவதைக் கேட்கக் கூடியவர் களாக இருப்பார்கள். நான் ஒரு போதகராக ஊழியம்செய்தபோது, அடக்க ஆராதனைகளில் சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுவேன். ஏனென்றால் வேதாகமம் ''விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; *உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான்''* என்று சொல்லுகிறது [பிர. 7:2 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

நோய், பொருளாதார இழப்பு, முறிந்த உறவுகள், இயற்கை அழிவுகள், பாவத்தின் பின்விளைவுகள், பாவத்துக்கான தண்டனையின் பின்விளைவுகள் இவைகளை அனுபவிக்கும்போது, தங்களுடைய துன்பங்கள் விழிப்படைய வேண்டும் என்பதற்கான அழைப்பே என்பதை உணர வேண்டும். தாற்காலிகப் பாடுகளின் மூலமாகத் தேவன் பாவிகளை நிரந்தர நியாயத்தீர்ப்பிலிருந்து காப்பாற்ற விரும்புகிறார்.

### சுருக்கம்

தேவன் தமது ராஜ்யத்தைக் கட்டுவதில் பெரும்பாலான பணியைத் தாமே செய்கிறார். புத்திசாலித்தனமாக அவரோடு ஒத்துழைப்பதே நமது வேலையாகும்.

எல்லா விசுவாசிகளும் இருளில் இருப்பவர்களின் கவனத்தை ஈர்க்கும்படி பரிசுத்தமும் கீழ்ப்படிதலுமுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும். தங்களுக்குள்ளிருக்கும் நம்பிக்கையின் சார்பாகப் பேச எப்போதுமே ஆயத்தத்தோடு இருக்க வேண்டும்.

எல்லோரும் தங்கள் இருதயத்தை மென்மையாக்கி, மனந்திரும்ப வேண்டும் என்ற தூண்டுதலளிக்க தேவன் எப்போதும் சிருஷ்டிப்பு, மனச்சாட்சி, அழிவு இவைகளின் மூலமாகவும் சில வேளைகளில் சுவிசேஷத்தின் அழைப்பின் மூலமாகவும் அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார்.

பாவிகள் ஒருபோதும் சுவிசேஷத்தைக் கேட்காவிட்டாலும் தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அவருக்குக் கணக்குக்கொடுக்க

வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறார்கள். அவர் களுடைய பாவம் அவர்களின் இருதயம் கடினப்பட்டிருப்பதை நிரூபிக்கிறது. அவர்கள் தொடர்ந்து இன்னும் மோசமாகப் பாவத்துக்கு அடிமைப்பட்டிருப்பது அவர்கள்மீதான தேவனுடைய கோபாக்கினைக்கு நிரூபண மாக இருக்கிறது.

சமயப்பிரகாரமான மக்கள் சத்தியத்தைத் தேடுகிறார்கள் என்று சொல்ல முடியாது. தங்கள் சமயத்தின் பொய்களை நம்புவதின்மூலம் அவர்கள் தங்கள் பாவங்களை நியாயப்படுத்த முயலுகிறார்கள்.

தேவன் ஒவ்வொரு நபரின் இருதயத்தின் நிலைமையை அறிந்திருக்கிறார். ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பவர்களிடம் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி அவர் நம்மை வழிநடத்தினாலும், பெரும்பாலும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களிடமே நம்மை வழிநடத்துகிறார்.

தேவன் பாடுகளின் மூலமாக மக்களின் இருதயத்தை மென்மைப் படுத்தும்போது, சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாம் அந்த வாய்ப்புக் களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தேவன் முழு உலகத்துக்கும் நாம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் நடபடிகளின் புத்தகத்தில் எடுத்துக்காட்டியுள்ளபடி, நாம் பிரதான கட்டளையே நிறைவேற்றுவதை நாடும்போது, தமது ஆவியானவரைப் பின்பற்ற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

தம்மை அறியும்படி உண்மையாகத் தேடும் எவருக்கும் தேவன் தம்மை வெளிப்படுத்துவார்.

தேவன் நாம் கொடுக்கும் செய்தி அவருடைய செய்திக்கு ஒத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

ஒருநாள் எல்லா இனக்குழுக்களிலிருந்தும் வரும் மக்கள் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக ஆராதிப்பார்கள். இந்த முடிவுக்காக நாம் தேவனோடு ஒத்துழைப்பதில் நமது பங்கைச் செய்ய வேண்டும். தேவனுடைய மக்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு இனக்குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் கிறிஸ்துவின் அன்பைக் காட்ட வேண்டும். தேவன் தமது ஊழியர்களில் சிலர் வெவ்வேறான கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களை இலக்காகக் கொள்ளும்படி, சபை ஸ்தாபிப்பவர்களை அனுப்பும்படியாகவோ, ஆதரிக்கும்படியாகவோ அல்லது அவர்களே செல்லும்படியாகவோ வழிநடத்தலாம். அப்படி அனுப்பப்படுகிறவர்கள் சீஷர்களை உருவாக்கி, தாங்கள் சீஷர்களை உருவாக்கும் ஊழியர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்!



# கடைசி வார்த்தைகள்

உங்களுக்கு இந்த நூலின் பிரதி கிடைக்கும்படி உங்களுடைய மொழியில் இந்த நூலை வெளியிடக் கிருபை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இது உங்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படியிருக்குமானால் எனக்கு எழுதித் தெரிவிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னால் ஆங்கிலத்தை மட்டுமே வாசிக்க முடியும். அதனால் உங்கள் கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதுங்கள். அல்லது அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எனக்கு அனுப்புங்கள்.

எனக்கு மின்னஞ்சல் அனுப்புவீர்களானால் என்னோடு நிச்சயமாகத் தொடர்புகொள்ள முடியும். எனது இமெயில் விலாசம்: tdmm@shepherdserve.org. உங்களுக்கு மின்னஞ்சல் தொடர்பு இல்லாதிருக்குமானால் எனது ஊழிய விலாசத்துக்கு நீங்கள் எழுதலாம். இந்தப் புத்தகத்தை நீங்கள் எப்போது பெற்றீர்கள் என்பதின் அடிப்படையில் எனது விலாசம் மாறியிருக்கலாம். எப்படியிருப்பினும் 2006ஆம் வருடத்தில் எனது விலாசம்: Shepherd Serve, P.O.Box 12854, Pittsburgh, PA 15241 U.S.A.

மேலும் அதிகமான போதனைகளைப் பெற எங்கள் இணைய தளத்தைப் பாருங்கள்: www.ShepherdServe.org.

## நீங்கள் சீஷர்களை உருவாக்கும் ஊழியரா? உங்களால் ஆக முடியும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக டேவிட் கர்க்வுட் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவத் தலைவர்களுக்கு மாநாடுகள் மூலமாக ஊழியம்செய்துவருகிறார். நாற்பது நாடுகளில் பல்லாயிரத்துக்கும் மேற்பட்ட போதகர்களுக்குப் பிரசங்கித்த அனுபவத்தைக் கொண்டு, இன்று கிறிஸ்தவத் தலைவர்கள் எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சினைகளைக் குறித்த வேதாகமப் போதனைகளை இந்த நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்.

சபை வளர்ச்சி, ஆவிக்குரிய யுத்தம், விவாகரத்தும் மறு திருமணமும், வேதாகமத்துக்கு அர்த்தம்காணுதல், வீட்டுச் சபைகள், ஊழியத்தில் பெண்கள், சபை ஆளுகை, ஆவிக்குரிய வரங்கள், நற்செய்தி ஊழியம் இன்னும் பல காரியங்களைப்பற்றி கர்க்வுட் போதிக்கிறார். பரவலாகக் காணப்படும் கருத்துக்களுக்கு வேதாகமரீதியான பதில்களைக் கொடுக்கிறார். அவருடைய முடிவுகள் சில வேளைகளில் உங்களைத் திகைப்படையச் செய்யலாம். ஒவ்வொரு கிறிஸ்தவத் தலைவரும் கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்பதே கர்க்வுட்டின் ஆழமான உறுதிப்பாடாகும்.

பல மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் பிரதான கட்டளையை நிறைவேற்றுவதில் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவத் தலைவர்கள் ஆற்றலோடு செயல்பட உதவி வருகிறது.